RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s2227

# திருவாசகத்தில் வழிபாட்டு மரபுகள்

**க. விஜயலெட்சுமி [அ, *], க. புவனேஸ்வரி [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Traditions of Worship in Thiruvasagam

**K. Vijayalakshmi [a, *], K. Bhuvaneswari [a]**

[a] PG and Research Department of Tamil, National College (Autonomous), (Affiliated to Bharathidasan University) Tiruchirapalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: kanapathiviji@gmail.com

Received: 11.09.2022
Revised: 28-10-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Thiruvasagam, the eighth of the twelve Thirumarais, divinely describes the methods of worship. Saivism is the oldest religion. Tirugnanasambandar, Thirunavukkarasar, Sundarar, and Manickavasagar are the four Saiva religion preceptors (Kuravars). It was because of these four that Saivism flourished. Manickavasagar was the one who worshipped the Lord in the Sanmarga system among these four Saiva saints. The methods of worshipping God, such as Right Conduct, Disciplined Acts, Ethics for the wellbeing of body and soul, and Enlightenment towards Lord Shiva, have also been explained. Through Bhakti Norma, the nature of many stages in the state of compassion, the warmth of love, humanity, compassion, and truthfulness are also explained. Through the path of devotion, the nature of the various stages of compassion, the warmth of love, humanity, kindness, and truthfulness are also explained. Manickavasagar was the root cause of the birth of the Sanmarga system. Next to that, it can be said that it was Vallalar and Bharathiar who took it to the people. It is the highest and most noble religion among the liturgical systems of worship. No one before or after Manickavasagar had the privilege of mingling with the Lord. His interconnection with God is also explained in this article.

**Keywords:** Thiruvasagam, Traditions, Worship, Tirugnanasambandar, Sundarar, Manickavasagar

## முன்னுரை

சைவ சமயம் தமிழர்களின் தனித்த ஆன்மீக நெறியாகும். பல்லாயிரம் ஆண்டுகள் இம்மண்ணில் வேரோடி, துளிர்த்து, வளர்ந்து, செழித்த, தழைத்த பயிரே சைவ சமயமாகும். இப்பயிர் வாட்டமுற்ற போதுக் கூடவே தமிழும் தளர்வுற்றது. இந்நிலையில் தான் சைவ சமயத்தைத் தாங்கிப் பிடித்ததோடு தமிழரின் வாழ்வையும் சைவ அருளாளர்கள் வளமாக்கினார்கள். சைவசமயம் என்பது மிகத் தொன்மை வாய்ந்த சமயம் ஆகும். சிவவழிபாடானது சிந்து சமவெளி நாகரிக காலத்திலிருந்து உள்ளது என்று வரலாறு கூறுகின்றது. சைவகுரவர்கள் நால்வரும் பலவிதமான வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றினர் எனினும் மாணிக்கவாசகரின் சன்மார்க்கம் இறைவனை அடையும் உயர்ந்த மார்க்கமாகத் திகழ்கின்றது.

## நூற்பெருமை

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் பாட சிவபெருமான் பாடிய திருவாசகத்தில் காணப்படும் வழிபாட்டு முறைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம். திரு ஓலையில் எழுதித் திருச்சிற்றம்பல உடையான் என்று கைச்சாற்று (கையெழுத்து) இடப்பெற்ற பெருமையுடையது. திருவாசகம் எந்த நூலுக்கும் இதனைப் போன்ற பெருமையும், அருமையும் இல்லை. திருவாசகம் 51 பகுதியாகவும் 658 பாடல்களையும் கொண்டது. திருவாசகம் உபநிடதம் போன்றது. தலயாத்திரை குறைவு. தேவார மூவரும் கோயில் கட்டியதாக வரலாறு. மாணிக்கவாசர் திருப்பெருந்துறையில் ஆவுடையார் கோயில் கட்டினார். இறைவழிபாட்டு மரபுகளுள் தலையாயது இந்தக் கோயில் வழிபாடே ஆகும்.

## உலகமே வழிபடும் இறைவன்

திருப்பெருந்துறையில் சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற மாணிக்கவாசகப் பெருமான் 'தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும்' என்ற கருணையுள்ளத்தோடு, தாம் பெற்ற இறையனுபவத்தை யாவரும் பெற வேண்டும் என்ற நோக்கிலே இறைவன் திருவடிப்பேற்றை நினைந்து, மனம் உருகிக் கசிந்து வழங்கிய பக்தி நூல் தான் திருவாசகம்.

'யாதும் ஊரே' யாவரும் கேளிர்' என்ற உலக சமுதாய ஒருமையைப பாடினான் சங்ககாலக் கணியன் பூங்குன்றன்,

"தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி ! (Mani, 2002)

உலக சமய ஒருமையை வெளிப்படுத்தினார் மாணிக்கவாசகர். இப்படி உலகமே வழிபடும் இறைவழிபாட்டைக் கூறுகிறார்.

## உலகரியச்செய்த போப்

உலகப் பொது நூலாகிய திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்த டாக்டர் ஜி.யு.போப் அவர்கள், அதை அடுத்ததாக திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு மட்டுமின்றி, திருவாசகத்தின் பக்திச் சுவையை உலகறியச் செய்தார் என்ற பெருமையும் அவருக்கே உரியதாகும்.

## இறைவனின் அருள் திறம்

நாயினும் கீழ்ப்பட்ட என்னைத் திருவடிகளைப் பாடுமாறு உடனின்று பணிந்து அருளினான் இறைவன். அவன் என் தலைவனானவன், எளியவனாகிய என்னுடைய உள்ளத்தின் கண் நிகழும் பிழைகளைப் பொறுத்தருளும் பெருந்தன்மையைப் பெற்றவன். அதனால் தானோ என்னவோ சிறியவனாகிய நான் செய்கின்ற பணிகள் முழுவதும் இகழ்விற்கு உரியவனவாகும். அப்பணியினையும் தன்னுடைய பெருந்தன்மையால் ஏற்றுக் கொண்டவன் இதனால் அவனை 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பிரிவு' என கொள்ளும் தன்மை உடையவன் என்கிறார்.

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" (Nadarasan, 2007)

என்று மாணிக்கவாசகரை சிவபெருமான ஆட்கொள்ளாது இருந்தால் என் சிந்தையும் உணர்வும் கெட்டு ஒழிந்திருக்கும்.

## சென்று உணராத் திருவடி

தனக்கென்று ஒரு பெயரும் ஒரு வடிவமும் இல்லாத சிவபெருமானுக்கு ஆயிரம் திருப்பெயரிட்டு அவனுடைய புகழைப்பாடுதல் திருவடிப் புகழ்ச்சி ஆகும். சிவபெருமானின் திருவடியை,

காக்கும் தெய்வமான திருமால் வராக (பன்றி) அவதாரம் எடுத்துச் சிவனின் திருவடியினைக் காண நிலத்தைப் பிளந்து கொண்டும் சென்று காணாமல் போய்ச் சேர்ந்தார். ஆனால் மாணிக்கவாசர் அந்தத் திருவடிகளைக் காண எவ்வித சிரமமும் இல்லாமல் இறைவனே அந்தண வடிவத்தில் வந்து என்னை ஆட்கொண்டார் என்பதை,

"திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடியை

உருநாமம் அறிய ஓர் அந்தணன் ஆய் ஆண்டு கொண்டான்" (Viswanathan, 2006).

## மாணிக்கவாசரின் இறைநெறி வழிபாடு

### சரியை நெறி

இறைவனை உள்ளன்போடு நினைத்து சிவன் திருக்கோவிலுக்குச் செய்யும் புறத்தொண்டினையும் சிவனடியார்க்குச் செய்யும் தொண்டினையும் இங்கு குறிப்பிட்டாலும், தீக்கை (தீட்சை) பெற்று மேற்கொள்ளத் தக்க புண்ணியத்தின் முதற்படியாகவே சரியையினைக் குறிப்பிடலாம். இந்நெறியைப் பின்பற்றி இறைவனின் இன்னருளை வேண்டுகின்றார்.

"பாட வேண்டும் நான் போற்றி நின்னையே

பாடி னைந்துநைந் துருகி நெக்கு நெக்

காட வேண்டு நான் போற்றி அம்பலத்

தாடும் நின்கழற் போது நாயனேன்" (Nadarasan, 2007)

இப்பாடலில் இறைவனின் உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் புறவழிபாடு சரியை என்று குறிப்பிடுகின்றார்.

### கிரியை நெறி

சரியை நெறி செய்த தொண்டின் முதிர்ச்சியினால், ஆணவம் பலம் முற்றுப் பெற்று கிரியை நெறியில் விருப்பம் ஏற்படும் என்பது அவர் கருத்தாகும். சிவபெருமானின் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்படும் புறவழிபாடும் அகவழிபாடும் அதாவது அப்பெருமானை 'மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்று உபசாரங்களையும் கொண்டு முறைப்படி வழிபடுதல் 'கிரியை' நெறியாகும்.

"தண்மலர் இட்டுமுட்டா திறைஞ்சேன்" (Nadarasan, 2007)

என்றும்

"அருவாய் உருவமும் ஆயி பிரான்" (Nadarasan, 2007)

திருவாசகத்தில் இப்பாடல் வரிகளில் கிரியை நெறியைப் பற்றி அழகாக பல இடங்களில் குறிப்பிடுகின்றார் மாணிக்கவாசகர்.

### யோக மார்க்கம்

மூன்றாவது ஒழுங்கு முறை வழிபாடு யோகமார்க்கம் என்பது இம்மார்க்கத்தில் இறைவனை மனத்தால் நினைத்து மனத்துகுள்ளேயே வைத்து வழிபடுவது. ஆன்மாவானது இறைவனிடம் நண்பனைப் போல் அருகில் செல்கிறது. இம்முறை வழிபாடு 'சகமார்க்கம்' எனப்படும்.

"கயன் மாண்ட கண்ணிதன் பங்கன், எனைக் கலந்து ஆண்டலுமே"

"நாம் ஒழிந்து சிவமான வாபாடித் தெள சொங் கொட்டாமோ" (Nadarasan, 2007)

இப்படி எடுத்துக் கூறுவது யோக நெறிக்குச் சான்றாகும். இப்பாடல் வரிகள் வாயிலாக தாம் இறைவனோடு ஒன்றி நின்ற தன்மையைச் கூறுகின்றார்.

### சன்மார்க்கநெறி

உலக உயிர்களிடம் அன்பு செலுத்தி, எல்லா உயிர்களையும் ஒன்றாக எண்ணி, அவ்வுயிர்கள் நன்மை பெறும் பொருட்டுத் தொண்டு செய்யத் தூண்டும் நெறி சன்மார்க்க நெறி. புத்தர், மகாவீரர், தேவாரமூவர், மாணிக்கவாசகர், இராமானுசர், தாயுமானவர், இராமலிங்க வள்ளல், பாரதியார் போன்ற பல முன்னோடிகள் நம் நாட்டில் தோன்றி சன்மார்க்கம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி மக்களுக்குப் பல வாழ்வியல் நெறிகளைத் தந்தனர்.

வள்ளலாருக்கு முன்பே இந்நெறியை மாணிக்கவாசகர் அறிமுகபடுத்த தாயுமானவர் அடுத்த நிலைக்கு கொண்டு சேர்க்க அதிக அளவில் மக்களிடம் கொண்டு சேர்த்தவர் வள்ளலாரே எனலாம். வள்ளலார் தம் காலத்தில் மக்களுக்குக் காட்டிய நெறி சன்மார்க்க நெறி பாரதியார் சன்மார்க்க வழியில் வள்ளலாரைப் பின்பற்றினார். இரக்கம் மனிதாபிமானம் இந்த நெறியை சீவகாருண்ணியம் இவற்றைச் சன்மார்க்கத்தின் முக்கியக் கொள்கைகளாக மாணிக்கவாசகர் வகுத்தார்.

பிறரின் துன்பத்தைக் கண்டு உள்ளம் உருகி, நம்மை அறியாமலேயே கண்ணீரை, குன்றிலிருந்து கோர்த்திடும் அருவிபோல வீழச்செய்ய வேண்டும். பாரி முல்லைக்குத் தேர் கொடுத்ததும், பேகன் மயிலுக்குப் போர்வையளித்தும் இந்த சன்மார்க்க நெறியை நமக்கு நன்கு புலபடுத்துகிறது. இரக்கத்தின் சிறப்பை உணர்ந்தவர்களால் மட்டுமே இந்தச் செயலை உணரமுடியும். எல்லையே இல்லாமல் மனவிரக்க முள்ளவர்களின் செயலுக்குப் பாரியும், பேகனும் மண்ணில் புதைந்த பொன் இருளிலே மின்னுவது போல ஒளி விடுகின்றனர்.

இரக்கமுற்ற பெருமக்கள், செடி, கொடிகளிடமே இவ்வாறு அன்பு காட்டினார் என்பதை உணரமுடிகிறது. இரக்கத்தின் உயர்ந்த நிலையை அடைவோர்களெல்லாம் சன்மார்க்க நெறியை பின்பற்ற முடியும். "இரக்கமே மாணிக்கவாசகர் உயிர் உடல் இரக்கமே அவர்". தன் சிந்தை, சொல், செயல், ஆன்ம அனைத்தும் இரக்கமே உருவாய்க் கொண்டவர் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் முதற்பாடலாக அமைந்துள்ளது சிவபுராணம் 95 அடிகளுடைய பாடலாகும்.

"நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"! (Nadarasan, 2007)

இந்த இரண்டு வரிகள் தாம் ஜி.யு,போப் என்னும் கிறித்துவ சமய ஆங்கிலப் பாதிரியாரின் உள்ளத்தைக் கவர்ந்து திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் செய்தவை என்று சொல்வார்கள். நமச்சிவாய என்றுக் குறிப்பிடும் வார்த்தை ஆண்டவனைக் குறிக்கும் பெயராக இருக்கிறது.

"அம்மையே அப்பா, ஒப்பிலாமணியே!

அன்பினில் விளைந்து ஆரமுதே"! (Nadarasan, 2007)

என்றும், மேலே குறிப்பிட்ட பாடல் கரியில் மாணிக்கவாசகர் ஆண்டவரை அம்மையப்பராக, அதாவது தாயாகவும் தந்தையாவும் விரிந்துப் பாடுகின்றார். ஒப்பில்லாதவரான இறைவனை அன்பில் விளைந்த அமுதம் என்கிறார்.

நான் நாயைப் போன்றவன், நாயினும் கீழானவன் என்றாலும் எனக்கு நீ தாயினும் சிறந்த கருணை காட்டும் தத்துவன் அல்லவா! என்னை விரும்பி ஆட்கொண்ட ஆண்டவன் அல்லவா? தன்னை நாயாக, நாயினும் கடையாக வைத்து 68 இடங்களில் திருவாசகத்தில் குறிப்பிட்டு இருக்கிறார் மாணிக்கவாசகர்.

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்"! (Nadarasan, 2007)

என்றும்

"நாய்க்கு நகை தோன்ற நின்றேன்

பேய்க்கு மிக இழிந்தேன்"! (Nadarasan, 2007)

என மாணிக்கவாசகர் நாய் கூட என்னைப் பார்த்துச் சிரிக்கின்ற இழிந்த நிலையில் நான் இருக்கின்றேயே!

இது எல்லாம் பரவாயில்லை உன் கருணையோடு அன்பை மட்டும் எனக்கு வேண்டும் என இறைவனை போற்றி பாடுகின்றார். மீண்டும் பிறவாத நிலை எப்போதும் வரும்? இறவாத நிலையை அடைகின்ற போது தானே? மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுகின்ற போது தானே! அந்தப் பிறவா நிலையை அளித்து என்னை ஆட்கொண்டான் இறைவன் என்கிறார் மாணிக்கவாசகர்.

"யானே பொய் என் நெஞ்சம்பொய் என் அன்பும் பொய்

ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே!

தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! தித்திக்கும்

மானே! அருளாய் அடியேன் உனைவந்துறுமாறே!" (Nadarasan, 2007)

மேலே குறிப்பிட்ட பாடல் வரியில் மாணிக்கவாசகர் குறிப்பிடுவது, நான் பொய்யாக இருக்கலாம் என் உள்ளம் இருக்கலாம். ஆனால், தீவினையேன் ஆகிய நான் உன்னை நினைத்து அமுதலால் உன்னைப் பெறலாம். தேனையும் அமுதையும் கரும்பின் தெளிவையும் போல் தித்திக்கும் எம்பெருமானே! ஆண்டவனை அடைய பிறவித் துன்பம் நீங்கி இறவா நிலையை அடைய எப்படி அழ வேண்டும் என்பதை உன் கருணையோடு விளக்குகிறார். நினைந்து நினைந்து அழ வேண்டும் உணர்ந்து உணர்ந்து அழ வேண்டும் உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து அழ வேண்டும் அன்பு நிறைந்து நிறைந்து ஊற்றெடுத்து வருகின்ற கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து அழ வேண்டும் என்கிறார், மாணிக்கவாசகர்.

இப்படி கருணை கண்ணீர் அன்பின் வெளிபாடு இவையெல்லாம் குறிப்பிடுவது சன்மார்க்க நெறி. அந்நெறியை உருவாக காரணமாக இருந்தவர் மாணிக்கவாசகர் என்று ஆதாரபூர்வமாக பல இடத்தில் இறைநெறி கலந்து பாடல் வரிகள் திருவாசகம் பகுதியில் காணலாம்.

## மெய்யுணர்நிலை

இறைவனின் திருவருளைப் பெற ஆன்மாவுக்கு அவரவர் இறையருள் சார்ந்த மனநிலைக்கு ஏற்ப தான், 'சரியை', 'கிரியை', 'யோகம்', 'ஞானம்' நன்கு முறையாக பின்பற்றிய பிறகு தான் ஞானசாரியர்கள் தீக்கை அளிபார்கள். முதல் மூன்று பாதைகளில் இறைவன் திருவருள் பயணத்தை முடிக்கும் தருணத்தில் "இருவினை -ஒப்பு" என்ற 'மெய்யுணர்வு நிலை' மனமானது அடையும்.

1. இருவினை - ஒப்பு (சரியீட்டு அமைதி நிலை)
2. மலபரிபாகம் (மெய்யுணர்வு முதிர்வு)
3. சக்தி இழப்பு.

என்ற இந்த மூன்று நிலைகளைக் கடந்த பிறகு 'ஆணவம்' என்ற குற்றம் (அல்லது அழுக்கு) நீங்கப் பெறுகிறது. இறையருள் நோக்கி ஆன்மாவின் பயணம் முற்று பெறும் போது இறைவன் 'நிர்வாணதீக்கை' (பேரின்பநிலையை) அளிக்கிறார். அதன் பிறகுதான் ஆன்மாவானது 'ஞான மார்க்கத்தில்' நுழைவு பெறும்.

மாணிக்கவாசகர் 'தீக்கை' பெற்றபின் அவர் உலக மாயைத்திலிருந்து முழுமையாக தன்னை விடுபடுகிறார். அவருடைய ஆன்மீகப் பயணத்தில் அவர் பாடிய பாக்களிலிருந்து ஞானக்குரவனாக வந்து சிவபெருமான பிரிந்ததிலிருந்து பிரிவாற்றமையைத் தாங்க முடியாது புலம்பியும், பிறகு சிவபெருமானைக் காணுவது போன்ற உணர்வும், அவற்றால் ஏற்படும் மகிழ்வும், பின் ஏற்படும் அமைதியும், பிறகு இறைவனை மறுபடியும் தேடும் வகையில் தன் கடும் முயற்சியும், கடைசியாக எம்பெருமானைக் காணுவதும் ஆக இவ்வகையான மனக்கிளர்ச்சியே திருவாசகம் முழுவதும் பரவிக் கிடப்பதைக் காண்கிறோம்.

மாணிவாசகரின் மார்க்கம் ஞான மார்க்கம் என்றே கூறலாம். இது மிகவும் உன்னத உயர்ந்த மார்க்கமாகும். இவ்வுயர்ந்த மார்க்கம் மாணிக்கவாசகருக்கு முன்னும் அவருக்குப் பின்னும் யாருக்கும் கிட்டவில்லை. மேற்கூறிய அனைத்தையும் நோக்குமிடத்து மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்களுள் மிகவும் தலை சிறந்தவர் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்று அறியமுடிகிறது. மாறுபாடுகள் உயர்ந்த பிறகு கடைசியில் இறைமையின் மெய்யுணர்வு நிலை எய்துகிறது.

“வான நாடரும் அறியொணாத நீ

முறையில் ஈறும் முன்தொடர் ஒணாத நீ

ஞான நாடகம் ஆடுவித்தவா,

நைய வையகத்துடைய விச்சையே”. (Nadarasan, 2007)

இறுதிப்படியில் மாணிக்கவாசகப் பெருமானின் புனிதமடைந்த ஆன்மாவானது தெய்வீகப் பேரின்ப நிலையை அடைந்து, மெய்ப்பொருளின் ஒளியில் தெய்வீகக் காட்சியைக் கண்டது. அந்தப் பேரின்ப நிலையில் தன்னை உயர்வான இறை இன்ப வெள்ளத்தில் சேர்க்குமாறு வேண்டுகிறார். பக்தி நிலையில் இறையருளைப் பெறத் துடிக்கும் பல படிகளாக அவை சுருக்கமாக கூறினால்,

1. ஆன்மாவின் அழுகை
2. இறையருளைப் பெற்று மகிழும் நிலை.
3. இறையருளைப் பிரிந்து (குருவைப பிரிந்து துயருற்றுக் கதறும் நிலை)
4. மீண்டும் இறையருளைப் பெற்று மகிழும் நிலை.
5. தான் பெற்ற அனுபவங்களை அனைவரும் பெற அழைக்கும் நிலை.
6. தன் உடம்பின் உள்ளே உறைந்துள்ள திருவடியின் சிறப்பு நிலை.
7. இறைவனைக் கண்டு களித்த நிலை.
8. தகுதியற்ற தனக்கும் இறைவன் அருளியதை நினைத்து உருகும்நிலை.
9. பரம்பெருள் எல்லாமுமாகியத் திகழ்வதை வியந்து நிற்கும் நிலை.
10. இறைவனிடம் வேண்டும் நிலை.
11. தான் பெற்ற பெரும் பேற்றை வியந்து வியந்து உருகும் நிலை.
12. பொய்யுடன் நீங்கி, ஒளியும் பெற்ற திறத்தை வியந்துரைக்கும் நிலை.

இப்படி பல படிநிலையை கடந்து தான் மாணிக்கவாசகர் இறைவனோடு கலந்தார்.

“எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால்

அரிப்புண டலந்த

வெறுந்தமி யேனை விடுதி கண்டாய்” (Nadarasan, 2007)

மேற்கூறியப பாடலில் ஒன்றாகிய உயிர் ஐந்து புலன்களிடையே அகப்பட்டு ஒவ்வொன்றும் தன் தன் விருப்பப்படி வேறு வேறு திசைக்கு இழுக்க, அவ்வுயிர் படுகின்ற துன்பத்திற்கு கூறியுள்ள எறும்புகளிடையே அகப்பட்ட நாங்கூழ்ப்புழு உவமையின் நயம் கண்டு உணர்தற்குரியது.

## மாணிக்கவாசகரின் இறைநெறி

இறை நெறி என்பது அன்பு, அறிவு, அருள், இரக்கம் என்னும் நான்கின் அடிப்படையில் அடைவது. இறைவன் அன்பு வடிவானவன், அறிவு வடிவானவன், கருணைக்கடலானவன். இங்கு கருணை என்பது இரக்கமாகும். இந்நான்கின் படிநிலைகளின் வாயிலாக ஒழுகும் ஒழுக்கமே இறை நெறியாகும்.

திருவாசகமோ ஆன்மா இறையுடன் கொள்ளும் உறவுக்குச் சிறப்பிடம் தருகிறது. உயிர் இறைவனோடு கொண்ட உறவில், ஓர் இடையூறு ஏற்பட்டு, அவ்வுயிர் பிரிவுத்துயிர் தாங்காமல், தான்

செய்த தவறுகளுக்காக நெக்குருகி, வருந்தி, அழுது அரங்கேறிய நிலையில் பாடப்பெற்றவையே திருவாசகம் ஆகும்.

உலகில் தோன்றிய ஒவ்வோரான்மாவின் அனுபவமாகவும் திகழ்கிறது. இறைவன் தானே வந்து, மாணிக்கவாசகரை வலிய அழைத்து, கடைக்கண்ணால் அருளிஇ திருவைந்தெழுத்தை ஓதிச் சென்னியில் பாதமலர்களை வைத்துத் திருவடித் தீக்கை செய்ததால் அவர் ஞானநிலை வரப்பெற்றார். அம்மகிழ்ச்சியில் தான் பெற்ற இறையருளை அச்சோப்பதிகம், சென்னிப்பத்து, அற்புதப்பத்து என்பனவாகும். பிடித்தபத்து, கோயில் திருப்பதிகம் அவரின சூழ்நிலையும் மனநிலையையும் வெளிப்படுத்துகின்றன.

ஆட்கொள்ளப்பட்ட ஆன்மா, களிப்பில் துள்ளிக்குதித்தாடி மகிழ்கிறது. அப்படிப் பெற்ற அருட்செயலால் தான் இறைவனுக்கு நன்றி கூறுவதாக, அவன் புகழைப்பாடிப் பாடி மகிழும் மனப்போக்கையே திருவெம்பாவையிலும் காண்கிறோம். இங்ஙனம் அவர் கொண்ட மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் வெளிப்படுத்தும் பதிகங்கள் பல உள்ளன. இவை தவிர, நாள் ஆக ஆக, பிரிந்த இறைவனைக் கூடும் வேட்கையைப் புலப்படுத்துவனவும், கூடுதல் வாய்க்காதோ என ஐயமுற்று அரங்கேறும் நிகழ்ச்சியை அழுதும், உலகப் பாசபந்தத்துயரங்களின்றும் தம்மை விடுவித்தருளுமாறு வேண்டிக் கரைந்துருகுவனவும் 'என்னைக் கைவிட்டுடாதே' எனக் கெஞ்சவானவுமான பல பதிகங்கள் உள்ளன.

"புன் புலால் யாக்கை புரை - புரை கனியப்

பொன் நெடும் கோயிலாப் புகுந்து, என்

என்பு எலாம் உருக்கி,

ஆகம் விண்டு, கம்பம் வந்து

குஞ்சி அஞ்சிக்கனே

ஆக என்கை, கண்கள் தாரை

ஆறு - அது ஆக ஐயனே"

மேலே குறிப்பிட்ட உணர்ச்சி மிகுந்த பாடல்கள் திருவாசகம் முழுவதும் பரவிகிடக்கின்றன. இங்கு இறைவனைப் பிரிந்து காலம் ஆக ஆகப் பிரிவுத்துயர் பெருகி உலக அல்லல்களால் துன்பம் நேரிட்ட போது அவ்வுயிர் செத்திலாப்பத்து, வாழாப்பத்து, குழைப்பத்து பிரார்த்தனைப்பத்து போன்றவற்றைப்பாடி அழுது அமையும் பதிகமாகும் என்று குறிப்பிடுகின்றார்.

ஒரு உயிர் வானுலகை ஆளச் செல்லும் இறுதிநிலை நோக்கிம் போது ஒரு முதலும் ஒரு முடிவும் உடைய நிகழ்ச்சித்தொடர்பு நின்று திருவாசகத்திலுள்ள 656 பாடல்களும் தம்முள் அதாவது மாணிக்கவாசகருள் ஒரு முழுத்தன்மையுடையனவாய் திகழ்ந்ததை நம்மால் உய்த்து உணரமுடிகிறது.

மாணிக்கவாசகர் தம் அனுபவத்தை, உலக அனுபவமாக்கிய கூற மாற்றங்கள், சோதனைகள், விளைவுகள், தீர்வுகள் யாவும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏற்படும். அத்தகைய நிகழ்வுகளைச் சுட்டும் குறியீடுகளே அவை தனி ஒரு மனிதரின் வாழ்க்கை, அனுபவம் என்றும் சொல்லலாம்.

இறுதி முடிவாக திருவாசகத்தின் தனிச்சிறப்பு யாதெனின் ஒவ்வொரு மனிதனும் தன்னை மாணிக்கவாசகர் இடத்தில் அமைத்துக் கொண்டு மாணிக்கவாசராகவே தன்னை பாவித்துக் கொண்டு அவருடைய சொற்களைத் தனதாக்கிக் கொண்டு, தன் நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து ஓலக்குரல் எழுப்பி இறைவனை கடைக்கண்களால் கண்டு அவன் முகத்தில் அருள், அன்பு, அமைதி நிலவுவதைக் கண்டு இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

"திருவாசகத்தில் வழிப்பாட்டு மரபுகள்" என்ற இக்கட்டுரையில் பக்தி இலக்கியத்தில் திருவாசத்தின் சிறப்பையும் பற்றி விளக்கப்பட்டுள்ளன. சிவபெருமானை நோக்கிச் செய்யும் சிரியை,

கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறியின் வழிப்பாட்டு முறைகள் கூறப்பட்டுள்ளன. வள்ளலாருக்கு முன்பே சன்மார்க்க நெறியை அறிமுகப்படுத்த தாயுமானவர் அடுத்த நிலைக்குக்கொண்டு சேர்க்க, அதிக அளவில் மக்களிடம் கொண்டு சேர்த்தவர் வள்ளலாரே எனலாம். இந்நெறியில் இறைஉணர்வு, மனிதநேய மாண்பு, மெய்யுணர்வு நிலை, சீவகாருண்ணியம் போன்றவை சன்மார்க்கத்தின் முக்கிய கொள்கைகளாக மாணிக்கவாசகர் வகுத்தார். நான்கு வகையான இறைநெறியின் மூலம் வழிபாட்டு முறைகளை பின்பற்றி இறுதியில் சன்மார்க்க இறைநெறியின் வாயிலா இறைவனைக் கடும் முயற்சியில் கண்ணால் கண்டு இறைவனோடு கலந்தார் என்பதே இந்த ஆய்வில் கண்ட முடிவாகும்.

## References


Mani, (2002) Manivasaga Aivurai Kalanjiyam, Thilagavathiyar Thiruvarul Aathinam, Pudhukottai, India

Nadarasan, (2007) Thiruvasagam, Uma Pathipgam, Chennai, India

Viswanathan, (2006) Manivasagamum Thiruvasagamum, Manivasakar Pathippagam, Chennai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License